**செ. கு. எண்: 005** **நாள்: 21.05.2021**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் திருச்சிராப்பள்ளியில் செய்தியாளர்களின் சந்திப்பின்போது அளித்த பேட்டி**

**முதல் பகுதி**

அனைவருக்கும் வணக்கம்!

தமிழக முதல்வராக பொறுப்பேற்ற பிறகு முதன்முதலாக திருச்சிக்கு இப்போது வந்துள்ளேன். உங்கள்அனைவரையும் சந்திப்பதில் நான் உள்ளபடியே பெருமைப்படுகிறேன்.

நடந்து முடிந்த சட்டமன்றத் பொதுத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தை பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற வைத்து இன்றைக்கு தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியை அமைத்திருக்கிறது என்பது உள்ளபடியே பெருமைக்குரிய ஒன்று. இத்தகைய நம்பிக்கையை வைத்து எங்களிடத்தில் இந்த ஆட்சியை ஒப்படைத்திருக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கு உங்கள் மூலமாக எனது நன்றியைத் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மே 2–ஆம் தேதிதான் வாக்கு எண்ணிக்கை நடந்தது. வாக்கு எண்ணிக்கை நடந்துகொண்டிருந்த போது திமுக பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்று வரும் செய்திகள் கிடைத்துக் கொண்டிருக்கும் போதே என்னை வந்து சந்தித்த அரசு அதிகாரிகளிடம் வாழ்த்துப் பெற்றதை விட மிகத் தீவிரமாக பரவிக் கொண்டிருக்கும் இந்த கொரோனா தொற்று பற்றி அதிகாரிகளிடம் ஆலோசனைகளைத்தான் அன்றைக்கு செய்து கொண்டிருந்தேன்.

குறிப்பாக, தலைமைச் செயலாளர், மக்கள்நல்வாழ்வுத் துறை செயலர் இரண்டு பேரையும் முழுமையாக அவர்களிடத்தில் சில கேள்விகளை கேட்டு,

விளக்கங்களை பெற்றுறேன். அந்த நேரத்தில் ரெம்டெசிவிர் மருந்து ஒரு பெரிய பிரச்சனையாகி, கூட்டம் நிரம்பி, அது கிடைக்காமல் மறியல் நடக்கும் நிலைகள் எல்லாம் இருந்தது. அதை எல்லா பகுதிகளிலும் வழங்கவேண்டும், ஏன் ஒரே இடத்தில் வழங்குகிறீர்கள் ? அதை ஏன் பிரித்து வழங்கக்கூடாது ? என்று கேட்டு, அதற்கான முயற்சிகளை எல்லாம் நாங்கள் எடுத்தோம் என்பது தெரியும்.

உயிர்காக்கும் பொருட்கள் எல்லாம் மக்களுக்கு முழுமையாக கிடைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நான் சொன்னேன். மே 4–ஆம் தேதி ஓர் அறிவிப்பை வெளியிட்டேன். பத்திரிக்கையாளர்களை முன்களப் பணியாளர்களாக நான் அறிவித்தேன். 1212 மருத்துவ செவிலியர்களை பணிநிரந்தரம் செய்யப் போகிறோம் என்ற அறிவிப்பையும் வெளியிட்டேன்.

அதற்குப் பிறகு மே 5–ஆம் தேதி அன்று அரசுமருத்துவமனைகள் எல்லாம் எவ்வாறு செயல்பட்டுக் கொண்டிருக்கிறதோ, அதேபோல தனியார் மருத்துவமனைகளும் துரிதமாகச் செயல்படும் நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன்.

தனியார் மருத்துவமனைகள் முடிந்த வரை கட்டணச் சலுகை வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் அந்த நேரத்தில் நான் எடுத்து வைத்தேன். அதற்குப் பிறகு மக்களுடைய மருத்துவத் தேவைகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள வேண்டும். எங்கு படுக்கை இருக்கிறது ? எங்கு ஆக்சிஜன் பிரச்சினை ? எங்கு சென்றால்உடனேஅட்மிட் ஆகலாம் ? எந்த மருத்துவமனைக்குப் போகமுடியும் ? என்ற சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காக ‘வார் ரூம்’ – ‘கண்ட்ரோல் ரூம்’ என்பதை அறிமுகம் செய்து உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். இவை அனைத்தும் முதலமைச்சர் என்கிற பதவிப் பொறுப்பை ஏற்பதற்கு முன் நடந்த விவரங்கள்.

மே 6–ஆம் தேதி கொரோனா பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும் 9 மண்டலங்களுக்கு தனியாக கண்காணிப்பு அதிகாரிகளை நியமிக்கச் சொன்னேன். அதற்குப் பிறகு மே 7–ஆம் தேதி நான் முதலமைச்சராக, நம்முடைய அமைச்சர்கள் பலர் பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்ட செய்தி உங்களுக்கு தெரியும். பதவிப்பிரமாணம் எடுத்துக்கொண்ட அன்று மாலையே கொரோனா தடுப்பு தொடர்பாக மாவட்ட ஆட்சியர்கள், மருத்துவ நிபுணர்களோடு ஒரு ஆலோசனையை நான் நடத்தினேன். அதற்கு அடுத்த நாள் ஆக்சிஜனைஅதிகமாக தமிழ்நாட்டிற்கு அனுப்ப வேண்டும் என்று பிரதமருக்கு, முதலமைச்சர் என்ற முறையில் நானே கடிதம் எழுதி இருக்கிறேன். ஏன் என்றால் தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் ஆக்சிஜன் போதுமானதாக இல்லை என்பதை நான் சுட்டிக்காட்டி அந்தக் கடிதத்தை எழுதி இருக்கிறேன்.

அதைத் தொடர்ந்து தமிழகத்தில் மே 10–ஆம் தேதியிலிருந்து 24–ஆம் தேதி வரை ஊரடங்கு அமல்படுத்தப்படும் என்று 8–ஆம் தேதிஅ ன்று நான் அறிவித்தேன். அதற்கு பிறகு 9–ஆம் தேதி உடனடியாக அமைச்சரவைக் கூட்டத்தை கூட்டினேன். உடனடியாக அமைச்சர்கள் எல்லாம் ஏதோ அமைச்சர் பதவி கிடைத்து விட்டது என்று வரவேற்பு நிகழ்ச்சி, பாராட்டுவிழா, மக்களைச் சந்திக்கும் நிகழ்ச்சி, கட்சித் தோழர்களை சந்திக்கும் நிகழ்ச்சி என்று செல்லாமல் உடனடியாக நிவாரண பணிகளில் நீங்கள் ஈடுபடுங்கள். கொரோனா தடுப்புப் பணிகளை முடுக்கி விடுவதற்காக மாவட்ட வாரியாக நீங்கள் சென்று அந்தக் களத்தில் நீங்கள் பணியாற்ற வேண்டும் என்று 14 மாவட்டங்களுக்கு 22 அமைச்சர்களை அறிவித்து அவர்களை உடனடியாக அனுப்பி வைத்தேன். அவர்கள் எல்லோரும் உடனடியாகத் புறப்பட்டு அந்தந்த மாவட்டங்களுக்குச் சென்று அந்த பணிகளை இன்று வரைக்கும் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் செய்யப் போகிறார்கள். அதில் எந்த மாற்றமும் இல்லை.

அதேபோல தமிழகத்தில் இயற்கை மருத்து வமையங்கள் அமைக்கப்பட்டன. ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட காரணத்தினால் வணிக, தொழில் நிறுவனங்கள் போன்ற அமைப்புகளின் நிர்வாகிகளை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களிடம் இது எவ்வாறு அமல்படுத்த வேண்டும் என்று ஆலோசனை கேட்டேன்.

அதற்குப் பிறகு மே 10ஆ–ம் தேதி கொரோனா நிவாரண நிதியாக 2 கோடியே 7 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு முதல்தவணையாக 2000 ரூபாய் தரப்பட்டது. அதேபோல தமிழகத்திற்கு நாள் ஒன்றுக்கு 20,000 ரெம்டெசிவிர் குப்பிகள் அனுப்ப மத்தியஅமைச்சர் பியூஸ் கோயல்அவர்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கோரிக்கை வைத்தேன்.

மே 11 சென்னையில் இருக்கும் ஏ.எம்.ஜெயின் கல்லூரியில் இயற்கை மருத்துவச் சிறப்பு மையத்தை திறந்து வைத்தேன். ஊரடங்கு காரணமாக பாதிப்புக்கு ஆளாகும் சிறு, குறு நிறுவனங்களுக்கு பல்வேறு சலுகைகளை அறிவித்திருக்கிறோம். அதேபோல, முதலீட்டு மானியத்தில் சலுகை, முத்திரைத்தாள் கட்டணத்தில் சலுகை, தொழில்வரியை செலுத்த 3 மாதம் அவகாசம். இவ்வாறு பல சலுகைகள் அரசின் சார்பில் வழங்கப்பட்டு இருக்கிறது.

ஆட்டோ, டேக்சி உரிமையாளர்கள் சாலைவரி கட்டுவதற்கு 3 மாதம் அவர்களுக்கு அவகாசம் கொடுத்திருக்கிறோம். அதே போல வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய கடனுக்கு கால நீட்டிப்பு ஆகியவற்றை அறிவித்திருக்கிறோம்.

தொழிலாளர்கள் பணிபுரியும் இடங்களிலேயே தடுப்பூசி போட்டுக் கொள்ளும் அந்த ஏற்பாட்டையும் செய்து இருக்கிறோம். அதுவும் நடந்து கொண்டிருக்கிறது.

தொழில் நிறுவனங்களுக்கு உதவ தொலை பேசி சேவை மையம் உருவாக்கப்பட்டிருக்கிறது. மே 12–ஆம் தேதி அன்று கொரோனா சிகிச்சைப் பணியில் உயிரிழந்திருக்கும் 43 மருத்துவர்கள் குடும்பத்திற்கு தலா 25 லட்சம் ரூபாய் நிதி அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

கொரோனா தடுப்புப் பணியில் மருத்துவர்களுக்கு 30 ஆயிரம் ரூபாய், செவிலியர்களுக்கு 20 ஆயிரம் ரூபாய், பயிற்சி மருத்துவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாய், இதரப் பணியாளர்களுக்கு 15 ஆயிரம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

கொரோனா தொற்றுபணியில் இருக்கும் செவிலியர்களோடு காணொளி வாயிலாக அவர்களையும் தொடர்புகொண்டு, அவர்களையும் ஊக்கப்படுத்த, உற்சாகப்படுத்த, அவர்களை பாராட்டி வாழ்த்தி முதலமைச்சர் என்ற முறையில் நானும் அவர்களோடு கலந்து பேசினேன். தமிழகத்திற்கு தேவையான தடுப்பூசியை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய உலகளாவிய ஒப்பந்தம் அதாவது குளோபல் டெண்டர் அந்த அறிவிப்பை செய்திருக்கிறோம். அதற்கான பணியில் ஈடுபட்டு இருக்கிறோம். விரைவில் அது நிறைவேறப்போகிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறு குறு நிறுவனங்களுடைய கடன் தொகைக்கான வட்டியை 6 மாதத்திற்கு வசூலிக்கக்கூடாது என்று ரிசர்வ் வங்கியின் ஆளுநருக்கு கடிதமும் அனுப்பப்பட்டிருக்கிறது. மே 13–ஆம் தேதி சட்ட மன்றத்தில் இருக்கும் அனைத்து கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கூட்டி, ஆக்சிஜன் இருப்பை பகண்காணிக்க 5 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது.

மே 14–ஆம் தேதி மாவட்டந்தோறும் கொரோனா தடுப்பு கட்டுப்பாட்டு அறைகள் திறக்கப்பட்டது. அனைத்துக்கும் மையமான கட்டளைமையம் சென்னையில் உருவாக்கப்பட்டது. அந்தவார் ரூமுக்கு நானே இரவு 11 மணிஅளவில் நேரடியாக சென்று ஆய்வு செய்தேன். மிகவும் சிறப்பாக அந்தவார் ரூம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதேபோல இன்னும் சில மாவட்டங்களில் தொடங்க வேண்டும் என்று முடிவெடுத்து வைத்திருக்கிறோம். அதற்கான ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருக்கிறது.

மே 15 மருந்துகளை கள்ளச் சந்தையில் விற்றால் குண்டர் சட்டம் பாயும் என்று ஒரு அறிவிப்பை வளியிட்டு இருக்கிறேன். அதேபோல தேர்தல் வாக்குறுதியில் சொன்னஆவின் பாலின் விலை லிட்டருக்கு 3 ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது.

மே 11 அன்றைக்கு மருத்துவமனைகளில் மட்டுமே ரெம்டெசிவிர் மருந்துகளை வழங்க முடிவு எடுக்கப்பட்டது. அதற்கு காரணம் என்ன என்பது உங்களுக்கு தெரியும். அதை விளக்கிச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஏன் என்றால் கூட்டத்தை தவிர்க்க, அதை கள்ளச் சந்தையில் வாங்கி விற்கும் ஒரு மோசமான நிலை இருந்து கொண்டிருந்தது. அதைக் கட்டுப்படுத்த வேண்டும். நேரடியாகஅதை எந்தெந்த மருத்துமனைகளுக்கு தேவையோ அவர்கள் அங்கிருந்து தொடர்பு கொண்டு அதற்கு உரிய மருந்துகளைவழங்கலாம் என்று யோசனை செய்து அந்த பணியை நிறைவேற்றி இருக்கிறோம். அதற்குப் பிறகு அனைத்து சட்டமன்றக் கட்சியின் உறுப்பினர்கள் கொண்டஒரு குழு அமைத்திருக்கிறோம். எல்லாக் கட்சியும் –ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி, ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு சட்டமன்றஉறுப்பினர்கள் என்ற வகையில் என்னுடைய தலைமையில் ஒரு குழு அமைத்திருக்கிறோம். அது நாளை கூடவிருக்கிறது. அதில் மேற்கொண்டு என்னென்ன பணிகள் செய்ய வேண்டும் ? இதை எவ்வாறு அணுக வேண்டும் ? ஊரடங்கு அறிவித்திருக்கிறோமே, அது 24–ஆம் தேதியோடு முடியப் போகிறது. அதை நீட்டிப்பதா ? அதுநீட்டிக்கின்றபோது என்னென்ன சலுகைகள் ? எவ்வளவு கட்டுப்பாடுகள் இருக்கலாம் ? என்பதையும் நாளை கலந்து பேசவிருக்கிறோம்.

அதற்கு முன்பு, மருத்துவர்கள் அடங்கிய எக்ஸ்பர்ட் கமிட்டி அதையும் கூட்டி பேசவிருக்கிறோம். அதுமட்டுமல்ல, கொரோனா பற்றி மக்களிடத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக தொலைக்காட்சியில் இருக்கும் ஊடகவியலாளர்களை அழைத்து ஒருகூட்டத்தை நடத்தி

இருக்கிறோம். அவர்களிடமும் யோசனை கேட்டிருக்கிறோம். அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளையும் எடுத்து வைத்திருக்கிறோம்.

மே 17–ஆம் தேதி அன்று வாகன வரி செலுத்த அவகாசம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. ஒடிசா, மேற்குவங்காளம் ஆகிய மாநிலங்களில் இருந்து நமக்கு ஆக்சிஜன் வந்தது. மே 18 ஆக்சிஜன், தடுப்பூசி, உயிர் காக்கும் மருந்துகள் தமிழ்நாட்டிலேயே தயாரிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கிறது. 50 கோடி ரூபாய் முதலீடு செய்யும் நிறுவனத்தோடு டிட்கோவும் இணைந்து இந்த தொழிலை தொடங்கப்போகிறது.

கொரோ தடுப்பு பணிகளுக்கான முதலமைச்சர் பொது நிவாரணநிதிக்காக நன்கொடையாக பெற்ற தொகையை பொருத்தவரையில் 25 கோடி ரூபாய் உயிர் காக்கும் மருந்துகளை வாங்கவும், 25 கோடி ரூபாய் திரவ ஆக்சிஜன் கொண்டு வர தேவையான கண்டெய்னர் வாங்கவும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மே 19–ல் தொழில்நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களோடு ஆலோசனை நடத்தி இருக்கிறோம். நேற்றைக்கு காலையில் சேலத்திற்கு சென்றிருந்தேன். மதியம் திருப்பூருக்கு, மாலையில் கோவைக்கு சென்றிருந்தேன். அங்கு பல்வேறு இடங்களில் நான் ஆய்வு செய்து இருக்கிறேன். கொரோனா தொற்று இரண்டாவது அலை உச்சத்தை தொட்ட இக்கட்டான நேரத்தில் தான் என்னுடைய அரசு பொறுப்பேற்று இருக்கிறது என்பது உங்களுக்கு நன்றாக தெரியும்.

இந்தியாவின் பல மாநிலங்கள் ஏற்கனவே இந்தப் பேரிடருக்கு போராடி வரும் நிலையில் பொறுப் பேற்ற உடனே இந்த சவாலை எதிர்கொள்ள வேண்டிய நிலை எங்களுடைய புதிய அரசுக்கு வந்திருக்கிறது. இந்த சவாலை ஏற்றுக் கொண்டு தமிழக மக்களுடைய உயிரைக் காப்பாற்றும் அத்தனைமுயற்சிகளையும்

நிச்சயமாக எங்களுடைய அரசு தலையாயக் கடமையாக செய்து கொண்டுவருகிறது.

இப்போது நாளொன்றுக்கு 34 ஆயிரம் பேர் என்ற அளவில் நோய்த் தொற்று ஏற்பட்டு கொண்டிருக்கிறது. நம்மைவிட குறைவான மக்கள்தொகை கொண்ட அண்டை மாநிலங்கள் சிலவற்றில் நாளொன்றுக்கு 50 ஆயிரத்திற்கு மேல் தொற்று ஏற்படும் சூழ்நிலை இருக்கிறது. ஊரடங்கு உத்தரவு மூலமாகவும், நோய்த் தடுப்புநடவடிக்கைகள் மூலமாகவும் தொற்றின் வேகத்தைகுறைத்து, நோய்த் தொற்று எண்ணிக்கையை கட்டுப்படுத்தியிருக்கிறோம். நோய்த்தொற்றின் உச்சநிலை விரைவில் எட்டப்படும் என்று பல்வேறு மருத்துவ நிபுணர்கள் எச்சரித்து கொண்டிருக்கிறார்கள். அனைவரும் கொரோனா பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றவேண்டும் என்று நான் அறிவுறுத்திவருகிறேன்.

மே 21 – இன்றைக்கு காலையில் மதுரையில் ஆய்வு நடத்திவிட்டு, இப்போது மாலையில் திருச்சிக்கு வந்து இருக்கிறேன். திருச்சியில் ஆய்வு நடத்தி இருக்கிறேன். அதற்குப் பிறகு இப்போது உங்களை சந்தித்திருக்கிறேன். எனவே ஆட்சி அமைத்து எவ்வளவு நாள் ஆகிறது என்பது உங்களுக்குதெரியும். மே 7–ஆம் தேதி பதவி ஏற்றுக்கொண்டு ஆட்சி அமைத்தோம். இன்றோடு இரண்டுவாரம் ஆகியிருக்கிறது. இந்த இரண்டு வாரங்களில் புதிதாக 16 ஆயிரத்து 938 படுக்கைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதில் 7,800 ஆக்சிஜன் வசதிகள்கொண்டவை. இயற்கை மருத்துவ மையங்கள் 30 திறக்கப்பட்டிருக்கிறது. 239 மெட்ரிக் டன் ஆக்சிஜன் நாள் ஒன்றுக்கு கூடுதலாக பெறப்பட்டுள்ளது. தமிழகத்தில் 370 மெட்ரிக் டன் ஆக்சிஜனும், வெளிமாநிலத்தில் இருந்து 100 மெட்ரிக் டன் ஆக்சிஜனும் நாளொன்றுக்கு பெறப்பட்டுள்ளது.

புதிதாக பல நிறுவனங்களில் ஆக்சிஜன் உற்பத்தியைத் தொடங்கி இருக்கிறோம். நாள்தோறும் 1.7 லட்சம் பேருக்கு ஆர்.டி.பி.சி.ஆர். பரிசோதனைகளை செய்து

வருகிறோம். புதிதாக மருத்துவர்கள் 2, 100பேர் நியமிக்கப்பட இருக்கிறார்கள். செவிலியர்கள் 6000 பேர் நியமிக்கப்பட இருக்கிறார்கள். இவ்வாறு தமிழகஅரசு தன்னை முழுமையாக இந்த கொரோனாதடுப்புப் பணிகளில் தான் ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது. அனைத்துஅமைச்சர்களும், அனைத்துதுறைஅதிகாரிகளும், சட்டமன்ற – நாடாளுமன்ற உறுப்பினர்களும் கொரோனா தடுப்பு பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். போர்க்கால அடிப்படையில் அரசு இயங்கிக் கொண்டுவருகிறது.

உண்மையிலேயே வெளிப்படையாக சொல்ல வேண்டுமென்றால் ஆட்சிக்கு வந்த மகிழ்ச்சியைவிட இந்த கொரோனா நோயை கட்டுப்படுத்துவதுதான் எங்களுக்கு உள்ளபடியே உள்ளப்பூர்வமான மகிழ்ச்சியாக இருக்கும். அப்போதுதான் நாங்கள் உள்ளபடியே மகிழ்ச்சி அடைவோம். அதில் எந்தமாற்றமும் இல்லை. என்றைக்கு தமிழகத்தில் கொரோனா தொற்று யாருக்கும் இல்லை என்று சொல்லப்படுகிறநாள் தான் உண்மையான மகிழ்ச்சிக்குரிய நாளாக இருக்கும். பாசிட்டிவ் என்று சொல்லலாம். என்றைக்கு நெகட்டிவ் என்று சொல்லப்படுகிறதோ அன்றைக்குதான் நான் முழு மகிழ்ச்சிஅடைவேன்.

இந்தநேரத்தில் தங்களுடைய உயிரைக் கொடுத்து பணியாற்றிக் கொண்டிருக்கும் மருத்துவர்கள், செவிலியர்கள், முன்களப் பணியாளர்கள், அரசுஅதிகாரிகள், காவல்துறையினர், உங்களைப் போன்ற பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் நான் இந்த நேரத்தில்அரசின் சார்பில் என்னுடைய இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

ஊடகங்களும் தமிழகஅரசின் கொரோனாதடுப்பு பணிகளுக்கு முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இறுதியாக நான் மக்களிடம் கேட்பது முகக்கவசம் அணியுங்கள், கிருமிநாசினி பயன்படுத்துங்கள், கட்டாயமாக தடுப்பூசியை போட்டுக் கொள்ளுங்கள். நம்மையும் காத்து இந்தநாட்டு மக்களையும் காப்போம் என்பது தான் என்னுடைய

உறுதியான வேண்டுகோள், என்னுடைய விருப்பமும் அது தான் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். **(தொடர்ச்சி பகுதி–2)**

**–––––**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**